# மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பத்திரிக்கைச் செய்தி

## Support Person (ஆதரவு நபர்) தேர்வு செய்து பட்டியலிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி மற்றும் ஆதரவு வழங்கும் நோக்கில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012-ன் பிரிவு 39, போக்சோ விதிகள், 2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.23, நாள்:12.08.2026 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி, மதுரை மாவட்டத்தில் Support Person (ஆதரவு நபர்) ஆகத் தேர்வு செய்து பட்டியலிடுவதற்குத் தகுதியுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### 1. கல்வித் தகுதி மற்றும் அனுபவம்

1. சமூகப்பணி, சமூகவியல், சட்டம், உளவியல், குழந்தைகள் வளர்ச்சி, குழந்தைகள் நலன், சுகாதாரம் அல்லது குழந்தைகள் நலனுடன் தொடர்புடைய பிற துறைகளில் முதுநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது
2. குழந்தைகள் நலனுடன் தொடர்புடைய துறையில் பட்டம் பெற்று, சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

தனிநபர் Support Person க்கான குறைந்தபட்ச வயது 25 ஆண்டுகள் ஆகும். விண்ணப்பதாரர்கள் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர தகுதிகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேலும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் படி காவல்துறைப் பின்னணி சரிபார்ப்பு உள்ளிட்ட தேவையான சரிபார்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

### 2. விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்

| வ.எண். | ஆவணங்களின் விவரம் |
|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் சுயவிவரம் மற்றும் சமீபத்திய புகைப்படம். |
| 2. | வயதுச் சான்றிதழ். |
| 3. | முகவரிச் சான்றிதழ். |
| 4. | கல்வித் தகுதிச் சான்றிதழ்களின் நகல்கள். |

Scanned with OKEN Scanner

| | |
|---|---|
| 5. | பணி அனுபவச் சான்றிதழ்களின் நகல்கள். |
| 6. | அடையாளச் சான்றிதழின் நகல். |
| 7. | அமைப்பின் சார்பில் விண்ணப்பிக்கும் நிலையில், அந்த அமைப்பின் பதிவு மற்றும் அங்கீகாரம் தொடர்பான ஆவணங்களின் நகல்கள். |

3. விண்ணப்பிக்கும் முறை

தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள், மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அதனை உரிய முறையில் முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித் தகுதி, பணி அனுபவம் மற்றும் இதர தகுதிகளுக்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறையின் மீது "Application for Empanelment as Support Person - Madurai District" எனக் குறிப்பிட்டு, 30.10.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

4. தேர்வு செய்யும் முறை

விண்ணப்பங்கள் அரசாணை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நடைமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்து பட்டியலிடப்படுவர். கடைசி நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்களும், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், தேவையான ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை,

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பெருந்திட்ட வளாகம், 3-ஆம் தளம், மதுரை - 625 020

மாவட்ட ஆட்சித்தலைவர்

மதுரை

14/10/26

நி.பா.அ-1

ம.கு.பா.அ

14/10

Scanned with OKEN Scanner